# பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கான COVID-19 தடுப்பூசி குறித்த விவரத்தாள்

12 முதல் 17 வயது வரையிலான பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கான COVID-19 தடுப்பூசி பற்றி அறிந்து கொள்ள வேண்டிய 10 விடயங்கள் இதோ.

1. **12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்குத் தடுப்பூசி போடுவது பாதுகாப்பானதும் பயனுள்ளதுமாகும்.**

   தடுப்பூசிகள் பாதுகாப்பானவையும், பயனளிப்பவையும் COVID-19 இலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான சிறந்த வழியும் ஆகும்.

   கனடாவின் சுகாதார அமைப்பு 12 முதல் 17 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு Pfizer-BioNTech தடுப்பூசியை அங்கீகரித்துள்ளதுடன், கடுமையான பக்க விளைவுகள் எதுவும் அற்ற இத்தடுப்பூசி இளைஞர்களுக்குப் பாதுகாப்பானது எனவும் ஏற்றுக் கொண்டுள்ளது.

   அமெரிக்காவில் 12 முதல் 17 வயதுடையவர்களுக்கு Pfizer-BioNTech தடுப்பூசியின் 3 மில்லியன் டோஸ்கள் வரை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இந்த வயதினரிடையே கடுமையான பக்க விளைவுகள் எதுவும் கண்டறியப்படவில்லை.

   மருத்துவப் பரீட்சார்த்த சோதனைகளில் Pfizer-BioNTech தடுப்பூசியானது, 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களை COVID-19 இலிருந்து பாதுகாப்பதில் மிகவும் பயனளிப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசியைத் தொடர்ந்து இளைஞர்கள் பெரும்பாலும் நல்ல நோயெதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்க முடியும், இதன் விளைவாக உறுதியான பாதுகாப்புக் கிடைக்கும்.

2. **பெரியவர்களைப் போலவே, பிள்ளைகளும் தற்காலிகமான பக்கவிளைவுகளை அனுபவிக்கக்கூடும்.**

   தடுப்பூசி பெற்ற பின்னர் பக்க விளைவுகள் ஒவ்வொரு நபருக்கும் வேறுபட்டவையாகும், பெரும்பாலானவை லேசானவை மற்றும் எளிதில் தாங்கிக்கொள்ளக் கூடியவை. கையின் மேற்புறத்தில் தடுப்பூசி வழங்கப்பட்ட இடம் மிருதுவாக இருத்தலை அல்லது அதில் வலியை உங்கள் பிள்ளை அவதானிக்கக்கூடும். அவர்கள் சோர்வு, தலைவலி, தசைகள் அல்லது மூட்டுகளில் வலி, காய்ச்சல் மற்றும் குளிருணர்ச்சி ஆகியன ஏற்படுவதையும் உணரக்கூடும். இந்தப் பக்க விளைவுகள் பொதுவாக 1 முதல் 3 நாட்களுக்குள் மாறிவிடும். இவை தடுப்பூசி வேலை செய்யத் தொடங்குகிறது என்பதற்கான சாதகமான அறிகுறிகளாகும்.

3. **பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்குத் தடுப்பூசிகள் முக்கியம், ஏனென்றால் அறிகுறிகள் இல்லாவிட்டாலும் கூட. அவர்கள் COVID-19 நோயால் பாதிக்கப்பட்டு மற்றவர்களுக்கும் பரப்பக்கூடும்.**

   COVID-19 தொற்றுக்குள்ளாகும் பிள்ளைகள் பொதுவாக லேசான அறிகுறிகளை அனுபவிக்கின்றனர் – இருப்பினும், ஏனைய சிலர் தீவிரமான மற்றும் நீண்டகால அறிகுறிகளின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுமளவுக்கு மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளனர். மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில், இந்த வைரஸ் பிள்ளைகளில் மரணத்தையும் ஏற்படுத்தக்கூடியது. இந்நோயால் அதிகமாகப் பாதிக்கப்படக்கூடிய அபாயமுள்ளவர்களுக்கும் கூட இந்த நோயைப் பிள்ளைகள் பரப்பக்கூடும்.

4. **வேறு உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் உட்படப் பெரும்பாலான மக்களுக்கு இந்தத் தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானதாகும்.**

   நோயெதிர்ப்பு சக்தியைப் பலவீனப்படுத்தும் மருந்துகளை உட்கொள்ளும் நபர்கள் அல்லது

தடுப்பூசியின் எந்த மூலக்கூறுகளுக்காவது ஒவ்வாமை உள்ளவர்கள் தங்கள் மருத்துவருடன் அது குறித்துக் கலந்தாலோசிக்க வேண்டும். முட்டை, ஜெலட்டின் (பன்றி இறைச்சி), குளூட்டன், லேடெக்ஸ், பாதுகாப்பான்கள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள் அல்லது அலுமினியம் ஆகிய எதுவும், COVID-19 தடுப்பூசிகளில் இல்லை.

மருத்துவ நிலைமைகளைக் கொண்டவர்களுக்கு COVID தொற்று ஏற்பட்டால் பெரும்பாலும் கடுமையாகப் பாதிக்கப்படும் அபாயத்தில் இருப்பதால், விரைவில் தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு இந்த நபர்களை நாம் மிகவும் அதிகமாக ஊக்குவிக்கின்றோம்.

பெரியவர்களுக்கு ஏற்படுவதைப் போலவே, ஒவ்வாமை எதிர்வினைகள் இத்தடுப்பூசிக்கு அரிதானவையாகும். படை நோய், முகம், நாக்கு அல்லது தொண்டை ஆகியவற்றில் வீக்கம் அல்லது சுவாசிப்பதில் சிரமம் ஆகியவை அறிகுறிகளில் அடங்கும்.

தடுப்பூசியினால் ஏதாவது ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்டால், அதனைக் கண்காணிப்பதற்கும் சிகிச்சையளிப்பதற்குமாகத் தடுப்பூசி போட்டுக் கொள்ளும் நபர்கள் யாவரும், தடுப்பூசி பெற்ற பின்னர் 15 முதல் 30 நிமிடங்களுக்குச் சிகிச்சையகத்தில் தங்கியிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

12 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கான COVID-19 தடுப்பூசிகளைக் கனடாவின் சுகாதார அமைப்பு இன்னும் அனுமதிக்கவில்லை.

5. **தடுப்பூசியினால் உங்களுக்கு COVID-19 தொற்று ஏற்படாது.**

   Pfizer-BioNtech எனும் இந்த COVID-19 தடுப்பூசி COVID-19 வைரஸில் காணப்படும் பாதிப்பில்லாத புரதத்தை எவ்வாறு தயாரிப்பது என உங்கள் உடலுக்கு அறிவுறுத்துவதுடன் அதற்கு எதிராக நோயெதிர்ப்பிகளையும் உருவாக்கத் தொடங்குகின்றது. உங்களுக்குத் தொற்று ஏற்பட்டால் உண்மையான வைரஸை எவ்வாறு அடையாளம் கண்டு போராடுவது என்பதனை உங்கள் நோயெதிர்ப்பு அமைப்பு இதன் மூலம் அறிந்து கொள்ளும்.

6. **உங்கள் பிள்ளைக்கு ஏற்கனவே COVID-19 தொற்று ஏற்பட்டிருந்தாலும் கூட, அவர்கள் தடுப்பூசி பெறமுடியும்.**

   முன்னர் ஏற்பட்ட COVID-19 நோய்த் தொற்றானது மீண்டும் நோயேற்படுவதிலிருந்து சிறிதளவு பாதுகாப்பை வழங்கக்கூடும் என்றாலும், அந்தப் பாதுகாப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது எமக்குத் தெரியாது, மேலும் உருமாறும் புதிய வகைத் தொற்றுகளிலிருந்து இது எம்மைப் பாதுகாக்காமல் விடவும் கூடும். நீங்கள் COVID-19 இலிருந்து மீண்டு வருகிறீர்கள் என்றால், உங்கள் சுய-தனிமைப்படுத்தலை முடித்துப் பெரும்பாலான அறிகுறிகள் நீங்கும் வரை நீங்கள் தடுப்பூசி பெறுவதைத் தாமதப்படுத்த வேண்டும்.

7. **சுகாதார அட்டை தேவையில்லை.**

   உங்கள் பிள்ளைக்கு சுகாதார அட்டை இல்லையென்றால், இணையத்தளத்துக்குப் பதிலாகத் தொலைபேசியில் உங்கள் சந்திப்பை முன்பதிவு செய்ய வேண்டியிருக்கலாம், மேலும் உங்கள் பிள்ளையின் பெயர், பிறந்த திகதி மற்றும் முகவரி என்பன குறிப்பிடப்பட்ட கடிதமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு, உங்கள் பாடசாலை, மருத்துவர் அல்லது மதத் தலைவரிடம் பேசலாம்.

   உங்கள் பிள்ளையிடம் சுகாதார அட்டை ஒன்று இருந்தால், சந்திப்பின் போது அவர்கள் அதைக் கொண்டு வரவேண்டும்.

8. **இயலுமானால், COVID-19 தடுப்பூசி தனியாகவும் வேறு தடுப்பூசிகளுக்குப் புறம்பாக அவற்றைத் தவிர்த்தும் கொடுக்கப்பட வேண்டும்.**

   COVID-19 தடுப்பூசிக்கு 14 நாட்களுக்கு முன்னராக அல்லது 28 நாட்களுக்குப் பின்னராக ஏனைய தடுப்பூசிகள் திட்டமிடப்பட வேண்டும். உங்கள் பிள்ளையின் நோய்த்தடுப்பு மருந்துகளில் நீங்கள் பின்தங்கியிருந்தால், தயவுசெய்து அவர்களின் உடல்நலப் பராமரிப்பாளரைத் தொடர்புகொண்டு அவர்களின் அனைத்து தடுப்பூசிகளையும் அவற்றுக்குரிய கால அட்டவணைப்படி, புதுப்பித்த நிலையில் வைத்திருப்பதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கவும்.

9. **தடுப்பூசிகள் தகவலறிந்த சம்மதத்துடன் வழங்கப்படுகின்றன.**

இந்த முடிவை சுயமாக எடுக்கும் திறன் இருக்கும் வரை,12 முதல் 17 வயதுடையவர்கள் உட்பட தனிநபர் ஒருவரிடமிருந்து தகவலறிந்த ஒப்புதல் பெறப்பட்டால் மட்டுமே COVID-19 தடுப்பூசிகள் போடப்படுகின்றன, சிகிச்சையைப் புரிந்துகொள்வது, அது ஏன் பரிந்துரைக்கப்படுகின்றது, மற்றும் தடுப்பூசி போட மறுத்தால் ஏற்படும் அபாயங்கள் மற்றும் நன்மைகள் பற்றிப் புரிந்து கொள்வதுதான் இதன் பொருளாகும். தடுப்பூசி பெறுவதற்குத் தனிநபர் ஒருவரால் முடிவெடுக்க முடியாத பட்சத்தில், அதற்குப் பதிலாக அவர்களின் பெற்றோர் அல்லது சட்டப்பூர்வப் பாதுகாவலர் போன்ற மாற்று-முடிவெடுப்பவரிடமிருந்து ஒப்புதல் பெறவேண்டியிருக்கும்.

தடுப்பூசி தொடர்பாக இளைஞர் ஒருவர் எடுக்கும் முடிவை சுகாதார வழங்குநரும் குடும்பமும் மதிக்க வேண்டும். ஒரு சிகிச்சையகத்துக்குச் செல்வதற்கு முன்னர் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தங்கள் பிள்ளைகளுடன் தடுப்பூசி பற்றிக் கலந்துரையாட ஊக்குவிக்கப்படுகின்றனர். ஒன்ராறியோவில் COVID-19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுள்ள எவரும் தாமாகவே முன்வந்து.அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

10. **COVID-19 தடுப்பூசி ஒன்றைப் பெற்றுக் கொள்வது, உங்கள் பிள்ளையின் உள நலனுக்கும் உடல் நலத்திற்கும் துணைபுரியக்கூடிய, அவர்களுக்கு விருப்பமான செயற்பாடுகளை அவர்கள் மீண்டும் தொடங்குவதற்கு உதவும்.**

COVID-19 பரவுவதைத் தடுக்கவும், மாணவர்கள் மற்றும் குடும்பங்கள் சாதாரண நடவடிக்கைகளைப் பாதுகாப்பாக மீண்டும் தொடங்கவும் தடுப்பூசி முக்கியமான ஒரு கருவியாகும்.

COVID-19 இலிருந்து போதியளவு மக்கள் பாதுகாக்கப்படும்போது, உங்கள் பிள்ளையின் தொற்றுநோய்க்கான ஆபத்து குறையத் தொடங்கும். தடுப்பூசிகள், முகக்கவசம்-அணிந்து கொள்ளல், தனிநபர் இடைவெளி தூரம் மற்றும் பிற முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்றுதல் ஆகியன பரந்தளவில் சமூகத்தின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க உதவும். பரந்துபட்ட சமூகத்தில் COVID-19 தொற்று எண்ணிக்கை கணிசமாகக் குறைவடைந்த பின்னரே பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கான இயல்பான நடவடிக்கைகள் மீண்டும் சாத்தியமாகும்.

## COVID-19 மற்றும் தடுப்பூசிகளைப் பற்றிய மேலதிகத் தகவல்கள் மற்றும் ஆதாரங்களுக்கு:

- **COVID-19 தடுப்பூசித் தகவற்தாள்**
- **COVID-19, உங்கள் COVID-19 தடுப்பூசிச் சந்திப்பு குறித்து** நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன
- 300 க்கும் மேற்பட்ட மொழிகளில் உதவி மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும். COVID-19 தடுப்பூசி குறித்த தகவல்களுக்கு **1-888-999-6488 (TTY 1-866-797-0007)** ஐ அழைக்கவும். தொலைபேசி இணைப்புகள் வாரத்தில் 7 நாட்களும் மு.ப. 8:00 மணி முதல் பி.ப. 8:00 மணி வரைக் கிடைக்கின்றன. உங்கள் மொழியைக் கேட்பதற்கு எண் 3 ஐ அழுத்தவும். அழைப்புகள் அதிகமாக இருந்தால் எவரிடமாவது பேசுவதற்கு நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கலாம்.